


## முன்னேற்றத்தின் ரகசியம்

# ஸ்மைல் ப்ளீஸ்...!

-இரா. வினோத்குமார்-

சண்டையின் இடையே ஓய்வாக இருக்கும் போது, குத்துச்சண்டை வீரர் ஒருவரின் விரல்கள் பேசிக் கொண்டன. பெரு விரல் சொன்னது, 'இருக்கும் விரல்களில் நான் தான் தடிமனாக இருக்கிறேன்; நான் தான் பெரியவன். அதற்கு ஆள்காட்டி விரல் சொன்னது, 'ஆட்களை சுட்டிக் காட்டும்போது நான் தான் முன்னுக்கு நிற்கிறேன்; அதனால் நான் தான் பெரியவன்'.

நடுவிரல் சொன்னது, 'எல்லோரையும் சேர்த்து பாருங்கள்... நான் தான் உயரமாக இருக்கிறேன். மோதிர விரல் சொன்னது, ஆபரணங்களை எனக்கு தான் அணிந்து அழகு பார்க்கின்றனர். நான்தான் பெரியவன்'.

கடைசியில் சுண்டு விரல், 'கடவுளை வணங்கும் போதும், தாய், தந்தையருக்கு வணக்கம் சொல்லும் போதும், நான்தானே முதலில் நிற்கிறேன். அப்போது நான் தான் பெரியவன்' என்று சொன்னது.

விரல்களின் மல்லுக்கட்டு முடிந்ததும், நிஜ சண்டையின் அடுத்த ரவுண்டு ஆரம்பமானது. குத்துச்சண்டை வீரனின் எதிராளி தாக்க வந்தபோது, கை விரல்களை மடக்கி, முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட, அவன் தோற்றுப்போனான்.

அப்போது, மீண்டும் விரல்கள் பேசிக் கொண்டன. 'அட... நாம் தான் பெரியவன் என்று ஆளுக்காள் பேசிக் கொண்டோமே... நாம் ஒன்றாக இருந்ததால் தான், எதிராளியை ஜெயிக்க முடிந்தது' என்றன.

விரல்கள் கூறும் 'ஒற்றுமையால் உயர்வு' என்ற இந்த கதை அனைவருக்கும் தெரிந்ததுதான். ஐந்து விரல்களும் மூலதனம் என்றாலும், இதில் ஒரே விரலில், தனக்கான அடையாளத்தை ஏற்படுத்தியவர், கோவையை சேர்ந்த மருதாசலம். ஒற்றை விரலின் மூலம், அரிய வகை புகைப்படங்களை 'சுட்டு' தள்ளி, மிகச் சிறந்த புகைப்படக் காரர்களின் பட்டியலில் இடம் பிடித்துள்ளார் மருதாசலம்.

கடந்து போன வரலாற்று நிகழ்வுகளுக்கு, மீண்டும் உயிர் கொடுக்கும் தன்மை வாய்ந்தவை புகைப்படங்கள். புருவங்களை உயர்த்தி பார்த்த சம்பவங்களுக்கு எடுத்துக்காட்டாக, போபால் விஷவாயு சம்பவம், உரக்கச் சொல்லும். அத்தகைய புகைப்படங்களின் பயணம்தான், இன்று வரை இவரை 'ஹாட்' ஆக வைத்திருக்கிறது.

இவரது பிளாஷ்பேக்கை புரட்டினால், ஓரளவு நல்ல நிலையில் இவரது குடும்பம் இருந்திருப்பதை காண முடிகிறது. தந்தை கிருஷ்ணசாமி. தாயார் மாரம்மாள். விவசாயி, அரசியல்வாதி என, பன்முகங்களை கொண்ட தந்தை, 1967ம் ஆண்டு, ராஜாஜி தலைமையில் செயல்பட்ட சுதந்திரா கட்சியின் சார்பாக, அவிநாசி தொகுதி எம்.எல்.ஏ.,வாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேற்கொள்ளும் பணியில் நேர்மை இருக்க வேண்டும் என்பதற்காகவும், சிற்சில காரணங்களுக்காகவும், இடையில் தன் பதவியை ராஜினாமா செய்தார். அந்த ஊற்று தான், மருதாசலத்தின் மனதில் கடலாக பரவியிருக்கிறது.

துவக்க காலத்தில், புகைப்படம் எடுப்பது, இவருக்கு பொழுதுபோக்காக அமைந்தது. இதுதான் தன் வாழ்க்கையை உயர்த்தும் என அப்போது தெரிந்திருக்கவில்லை. புகைப்படம் எடுப்பவர்களுக்கு ஆசானாக இருப்பது இயற்கை தானே. பஞ்சபூதங்களை கேமிராவுக்குள் அடக்கப் பழகியதால், பல சர்வதேச விருதுகள் இவரது முகவரியை தேடி வந்தன. இவற்றின் ஊடே, விவசாயம் சார்ந்த தொழில், காயர் பைபர் பேக்டரியும் நடத்தி வந்துள்ளார். ஆனால், புகைப்படங்கள் எடுப்பதில் வால் பிடித்து வந்த ஆர்வத்தால், இதில் கவனம் செலுத்தத் துவங்கினார். இதையே தொழிலாகவும் மாற்றினார்.

இன்று, கோவை மாவட்டத்தில் உள்ள பல வி.ஐ.பி.,க்களின் வீட்டுச் சுவர்களை, இவர் எடுத்த புகைப்படங்கள் கம்பீரமாக அலங்கரிக்கின்றன. இதன் தொடர்ச்சியாக, கோடாக் எக்ஸ்பிரஸ் போட்டோ சென்டரை, கோவையில் துவக்கினார். படிப்படியாக வளர்ச்சி கண்டு, 1996ம் ஆண்டு, புகைப்படம் எடுப்பதில் டிஜிட்டல் தொழில் நுட்பத்தை கோவையில் அறிமுகப்படுத்திய பெருமைக்கு சொந்தக்காரரானார். தரம், சிறப்பான சேவை, கையைக் கடிக்காத கட்டணம் உட்பட காரணங்களால், ஏகப்பட்ட வாடிக்கையாளர்களின் விருப்ப கலைஞராக மாறினார்.

'கோவையை மட்டும் உங்கள் பார்வையில் 'குளோஸ் அப்' ஆக வைத்துள்ள நீங்கள்... மற்ற மாவட்டங்களிலும் கவனம் செலுத்தாதது ஏன்?' இந்த 'வைட் ஆங்கிள்' நோக்க கேள்வியை கேட்டு முடிக்கும் முன்பே, ''பணியின் தரம் தான், மனிதனை முகம் பார்க்காமல் இழுத்து வரச் செய்கிறது. அனைத்து இடங்களுக்கும் நான் சென்று பார்க்க முடியாத படியால், கோவை ரேஸ் கோர்ஸிலும், சாய்பாபா காலனியிலும் மட்டும் நிறுவனத்தை நடத்தி வருகிறேன். புகைப்படத் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று, பலர் கேமராக்களை இயக்கத் தெரியாமல், புகைப்படம் எடுக்க துவங்கி விட்டனர்,''.

''சிலர், 'வைல்டு லைப்' புகைப்படக்காரர் என்று தங்களை சொல்லிக் கொண்டு, வனத்துக்குள் சென்று, விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் தொந்தரவு ஏற்படுத்தி, எடுத்த படங்களை 'அரிய வகை புகைப்படங்கள்' என்று மார் தட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இது முற்றிலும் தவறு. விலங்குகளையும், பறவைகளையும் தொந்தரவு செய்யாமல் எடுக்கப்படும் புகைப்படங்களில் மட்டும் தான், உண்மையான சுயரூபம் தெரியும். புகைப்படம் எடுப்பதில் பொறுமை முக்கியம்,''.

''இத்துறையில் சாதித்தவர்களிடம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். நல்ல புகைப்படம், ஏதாவது ஒரு கருத்தை சொல்வதாக இருக்க வேண்டும். இயற்கை மட்டுமல்லாது, பார்வையில் புதிய புரிதலை ஏற்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். 1960ம் ஆண்டு, வியட்நாமில் நடந்த போரின் போதும், போபால் விஷ வாயு சம்பவங்களின் போதும் வெளியான புகைப்படங்கள், மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வருடங்கள் கடந்தும் பேசப்படும் புகைப்படங்கள் தான், நம் அடையாளத்தை வெளிப்படுத்தும்,'' என்றார்.

எல்லாம் சொல்லி விட்டு... இவரது நிறுவனத்தின் பெயரை சொல்லாமல் விட்டு விடுவோமா என்ன? ஆர்.கே., போட்டோ சென்டர் தான், இவருக்கான முகமும், முகவரியும். மனைவி விமலா. மகள் சுகுணா, மகன் சிவசங்கருக்கு திருமணமாகி விட்டது. வீட்டில் இவரது நான்கு பேரப்பிள்ளைகளின் பாசம், 'ஸ்மைல் ப்ளீஸ்...' சொல்லாமலே இவரை எப்போதும் சிரிப்புடன் வைத்திருக்கிறது.



குடும்பத்தினருடன் மருதாசலம்.


மருதாசலம்

### உச்சத்தில் மெச்ச வைக்கும்!

''புகைப்படத் துறையில் மட்டுமல்லாமல், அனைத்து துறைகளிலும் சாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், தவறு செய்யுங்கள். தெரிந்தே செய்யும் தவறிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள முடியாது. தெரியாமல் செய்யும் தவறில் இருந்து தான் பாடம் கற்றுக் கொள்ள முடியும். நான், என் மனசாட்சிப்படி உயர்ந்திருக்கிறேன் என்றால், பல தவறுகள் தான் என்னை வழி நடத்தின. என்னுடைய அலமாரியை பல விருதுகள் அலங்கரித்துக் கொண்டிருந்தாலும், தினம், தினம் என்னை புதுப்பித்துக்கொண்டே இருக்கிறேன்,''.

''ஐந்து நாட்கள் வேலை செய்து விட்டு, இரு நாட்கள் 'ரிலாக்ஸ்' ஆகி விடலாம் என்று நினைக்கக் கூடாது. இருக்கும் மணித்துளிகளை உபயோகமாக மாற்றத் தெரிந்தவர் தான் புத்திசாலி. இயற்கை சார்ந்த புகைப்படங்கள் தான், எனக்கு அதிக விருதுகளை பெற்றுத் தந்தது. முயற்சியும், கூடவே பயிற்சியும் இருந்தால், ஒரு போதும் அயர்ச்சி உள்மனதுக்குள் நுழையாது. புகைப்பட விஷயத்தை தொழிலாக பார்த்தோமே என்றால், சலிப்பு தட்டத்தான் செய்யும்,''.

''அதையே, நம் வளர்ச்சிக்கான வித்தாக பார்த்துக் கொண்டால், விழுதுகள் தானாக படர துவங்கும். விழுதுகள் போன்று, பூமியில் கால் பதித்தால் தான், வருங்கால சமுதாயத்துக்கு நம் பாதைகள் தெரிய வரும். அடுத்தது, தங்களை தாங்களே சுய மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகள் நிச்சயம் ஒரு நாள், உலகின் உச்சத்தில் உட்கார வைக்கும். உள்ளோரை எல்லாம் மெச்ச வைக்கும்,''.